## உயிரியல் பல்வகைமை மற்றும் அதனுடன் இணைந்த பாரம்பரிய அறிவு மற்றும் புழக்கம் பற்றிய தேசிய கொள்கை மற்றும் உபாய வழிகள்

**2. 2020………..**

**3. அறிமுகம்**

## I. அறிமுகம்

புராதன கலாசாரததிற்கு சான்று பகர்கின்ற 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இதிகாச கதைகளுடன் இலங்கை, பாதுகாப்பு, நாட்டுப் பாதுகாப்பு, மேம்பாடு, வளர்ச்சி, அனுமதித்தல் மற்றும் மாதிரியெடுத்தல் போன்ற பொருத்தமான பாரம்பரிய அறிவு முறைமைகள் மற்றும் சம்பிரதாய பூர்வ கலாசார வெளியீடுகளின் ஊடாக வளம் பெற்ற சுபீட்சமான நாடொன்றாக கருத முடியும்.

ஏதேனும் நிச்சயமான பூகோள எல்லைக்குள் அல்லது பிரதேசமொன்றில் வாழ்கின்ற மக்கள், அவர்களுடைய சம்பிரதாயம் மற்றும் அவர்களுடைய நினைவின் ஊடாக வைத்திருக்கின்ற பல்வேறுபட்ட அறிவு அந்த பூகோள எல்லைகளினால் குறிப்பிடுகின்ற பிரதேசங்களுக்கு மற்றும் மக்களுக்கு அல்லது ஏதேனும் சமுகக் குழுவுக்கு உரிய பாரம்பரிய அறிவாகக் கருதப்படும். ஏதேனும் பணியொன்று தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக, முழுமையாக அல்லது பகுதியளவில் பாரம்பரிய அறிவு தொட்டுணரக் கூடிய அல்லது தொட்டுணர முடியாத உற்பத்தியொன்று அல்லது அது போன்ற உன்னத உற்பத்திக்கு வழிகாட்டலொன்று தொடர்பாக பயன்படுத்திக் கொள்ளுதல் பழக்கமாகும். இலங்கையில் பாரம்பரிய அறிவு காலநிலை, விவசாயம், நீர்ப்பாசனம், உயிரின பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு போன்ற துறைகள் உள்ளடங்குகின்றன.

உலக நாடுகளில் இலங்கை மிக நீண்ட பாரம்பரியமொன்றின் ஊடாக கலாசாரமொன்றுடன் இலக்கியமொன்றை ஒருங்கே கொண்டுவந்த ஒரு விசேடமான தீவொன்றாகும். இந்த தொடர்சியான கலாசாரத்திற்கு அடிக்கடி ஏற்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்பின் காரணமாக ஏதேனும் தாக்கங்கள் ஏற்பட்ட போதும் 15 ஆம் மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகள் வரை அது தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தது. தற்பொழுதும் கூட நாட்டின் தூரப் பிரதேசங்களில் மக்களினால் தேசிய வாதம் மற்றும் அதனுடன் இணைந்த பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் மிகவும் ஆர்வத்துடன் பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.

மேற்கத்தேய தொழில்நுட்பம் மற்றும் கலாசார ஆக்கிரமிப்புக்களின் தாக்கங்களின் காரணமாக பாரம்பரிய அறிவு மற்றும் அதனுடன் இணைந்த காரணிகள் அனேகமானவை ஏறக் குறைய அழிவுக்கு உட்பட்டு வருகின்றது. இது வரை சிறந்த தொடர்பொன்றை கொண்டிருந்த பாரம்பரிய அறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்நாட்டு வளங்களினை தட்டிக் கழித்தல் இயற்கை வளங்கள் தொடர்பாக மிகவும் மோசமாக தாக்கம் செலுத்தியுள்ளது.

## II. தேசிய கொள்கையொன்றின் தேவை

இலங்கை பங்காளி நாடொன்றாக உயிரின பல்வகைமை சமவாயத்தின் 8 (ஜே) பிரிவின் ஊடாக பாரம்பரிய மக்களின் உயிரின போக்கினை வளப்படுத்துவதற்கு பாரம்பரிய அறிவினை பாதுகாத்து பயன்படுத்துதல் தொடர்பாக பங்குதாரர் நாடுகள் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரின பல்வகைமை மற்றும் அதனுடன் இணைந்த பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய கொள்கையை தயார் செய்யும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதே போன்று பாரம்பரிய அறிவுக்கு உரிய வேறு சர்வதேச சமவாயங்கள் மற்றும் ஒன்றியங்கள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் உரிய விடயம்

மற்றும் தொடர்பாக ஏற்படுகின்ற ஒன்றியங்கள் தொடர்பாகவும் இது ஏற்பாடுகளை வழங்குகின்றது.

உயிரின பல்வகைமையில் வளமான நாடுகளுக்குரிய விசேட பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் தொடர்பான பெறுமதியை புரிந்து கொண்டுள்ள உலகின் பிரபல்யமான நாடுகள், தற்பொழுது சட்டரீதியற்ற வழிகளிலும் கூட அதனைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதே போன்று பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்க முறையிலிருந்து விடுபட்டுச் செல்லும் அச்சுறுத்தலுடன் கூடிய இலங்கை போன்ற நாட்டில் உள்நாட்டு வளங்களின் பயன்பாடும் நலிந்து போகும் நிலைக்கு உள்ளாகியுள்ளது. இதன் பெறுபேறொன்றாக எமக்குச் சொந்தமான விசேட பாரம்பரிய அறிவின் பெறுபேறாக, உரிமைகள் அனுமதிப் பத்திரத்தின் ஊடாக வேறு முன்னேற்றமடைந்த நாடுகள் பெற்றுக் கொள்வதுடன் உள்நாட்டு வளங்களின் பயன்பாடு அழிந்து போவதன் காரணமாக இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி பின்னடைவுக்கு உட்பட்டுள்ளது. விசேடமாக பாரம்பரிய அறிவு பரம்பரை பரம்பரையாக உரிமையாகும் சம்பிரதாய பூர்வ ஒழுங்குமுறை நலிவடைதல் அந்த அறிவு இல்லாது போவதற்கு தாக்கம் செலுத்திய மேலுமொரு பிரதான காரணியாகும்.

தேசிய தேவை தொடர்பாக பாரம்பரிய அறிவினை பாதுகாப்புடன் பயன்படுத்துவதற்கு உள்ள தேவைகளில் ஓரளவு தடைகள் கருதத்தகு பிரச்சினையொன்றாகும். மக்களின் தேசியத்தன்மை தொடர்பான மனோபாவத்தை நீக்கிவிட்டு தற்பொழுது நாட்டின் பிரதான அபிவிருத்தி தேவையை இலக்கு வைத்து அமுல்படுத்துவதற்கு எதிர்பாரக்கின்ற அனேகமான பணிகள் தேசிய யதார்த்தத்திற்கு பொருந்தாமையினால் தோல்வியடைந்துள்ளது. அதே போன்று வினைத்திறனான வினைத்திறனான பாரம்பரிய அறிவினை கவனத்திற் கொள்ளாமல் செலவு அதிகமான மற்றும் பொருந்தாத தொழில்நுட்பத்தின் படி தங்கியிருப்பதன் காரணமாக அபிவிருத்தி நன்கொடைகள் வரை வீணாகிப் போவதற்கு உள்ளாகி உள்ளது. இந்த நிலைமை விவசாய, மருத்துவ, மீன்பிடி போன்ற அனைத்து துறைக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது.

இந்த விடயங்களிலிருந்து தெளிவாவது தேசிய மக்களின் வாழ்க்கை வட்டம் மற்றும் மிகவும் இணைந்த பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய தேசிய கொள்கையின் அத்தியாவசியத் தன்மையாகும்.

இந்த தொழில்நுட்பத்தின் ஊடாக வர்த்தக நோக்கங்களிலிருந்து புறம்பாக மனித தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் தொடர்பாக பயன்பாட்டுக்குப் பொருத்தமான உபாய வழிகளை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய தேசிய கொள்கை இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு உதவி புரியக் கூடும்.

**4. அபிப்பிராயம் :**

நிலையான அபிவிருத்தி சட்டகத்தினுள் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களை பாதுகாத்தல் மற்றும் அதன் ஊடாக இயற்கை வளங்களின் பயன்பாடு முகாமை செய்து தேசிய மக்களின் வாழ்வாதார போக்கினை கட்டியெழுப்புவதனை உறுதிப்படுத்தல்.

**5. பிரதான கோட்பாடுகள்**

I. பாரம்பரிய அறிவு பரம்பரை பரம்பரையாக வழிவந்த சில சந்தர்ப்பங்களில் முதல் போக்கு சரியாக தேடிக் கொள்ள முடியாத வளங்கள் என்பதுடன் அது உள்நாட்டு மக்கள் பிரதிநிதித்துவப்படுகின்ற உரிய விசேட மகக்ள் குழுவின் அல்லது மொத்தமாக நாட்டு மக்களுக்கு உரிய பொது உரிமையாக கருதுதல் வேண்டும்.

II. சகல பிரசைகளுக்கும் பாரம்பரிய அறிவு மற்றும் வழிவகைளை நிலையான வகையில் பயன்படுத்தும் உரிமை காணப்படுவதுடன், எவருக்கும் இந்த பாரம்பரிய அறிவு மற்றும் பாரம்பரிய அறிவு அல்லது பாரம்பரிய அறிவின் ஊடாக பயன்படுத்துகின்ற வளங்கள், அழிவுக்கு உள்ளாவதற்கு மற்றும் எதிர்கால பரம்பரைக்கு பாரம்பரிய அறிவின் பயன்பாட்டை தடுத்துக் கொள்வதற்கு உரிமையில்லை.

III. பாரம்பரிய அறிவு மற்றும் பக்க வழங்கங்கள் உயிரியல் வளங்களின் பயன்பாடு தொடர்பாக பயன்படுத்தும் போது அந்த வளங்களினுடைய பயன்பாடு முறையாக மற்றும் நிலையான விதத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும் மற்றும் அந்த பயன்பாட்டின் சூழல் கட்டமைப்பு மற்றும் பரினாம செயற்பாடுகளுடன் உடன்பாட்டுடன் மேற்கொள்ளப்படுவதாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

IV. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களை பாதுகாத்தல் பரந்த சமுக பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

V. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களைக் கொண்ட விசேட பாரம்பரிய பெறுமதி மற்றும் சடங்குகள், உள்நாட்டு அறிவினைக் கொண்டோர் மற்றும் அது பரம்பரை பரம்பரையாக பரவிச் செல்வதற்கு உதவியாக இருந்த போதும் ( எழுத்து மற்றும் வாய்மொழி) உரிய பிரகாரம் மதிப்பீடு செய்வதற்கும், ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் மதிப்பளித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

VI. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களை உரிய முறைமைகளைப் பயன்படுத்தி ‘‘ பாதுகாப்பான ஆவணத்தில் பதிவு செய்தல்’’ போன்ற பொருத்தமான முறைமையொன்றின் ஊடாக இடைவிடாது பேணிச் செல்லுதல் வேண்டும். அதே போன்று பாரம்பரிய அறிவு பற்றிய உரிமைகள் பற்றிய அறிவை வகிக்கின்ற உரிய நபர்கள், மக்களுக்கு அல்லது நாட்டு மக்களை பொது வளங்களாக வழங்கி மற்றும் பாரம்பரிய அறிவுப் பயன்பாட்டினை கட்டியெழுப்புகின்ற பெறுபேறுகளை சமமான மற்றும் நியாயமான விதத்தில் பகிர்நது செல்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

VII. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை நிலையாக தற்காலிக அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக பயன்படுத்துதல் வேண்டும்.

VIII. பாரம்பரிய அறிவு பற்றிய கற்கை, ஆய்வு மற்றும் ஆராய்சிகளை மேற்கொள்வதனை ஊக்கப்படுத்தல் வேண்டும்.

## 6. பிரதான கோட்பாடுகள்

i. சகல மட்டங்களில், பங்குபற்றல், தூரநோக்கு, மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டின் ஊடாக பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் முகாமை மற்றும் பயன்பாடு ( பாதுகாப்பு, காப:பு மற்றும் நிலையான தன்மை) மேற்கொள்ளுதல் வேண்டும்.

ii. பாரம்பரிய அறிவினை பாதுகாப்பதில் உள்ள பொருளாதார, சமுக மற்றும் சுற்றாடல் முக்கியத்துவங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதுடன், இந்த அறிவினை நிலையான பயன்பாட்டை மக்களின் முன்னேற்றத்திற்காக இருத்தல் வேண்டும்.

iii. இயலளவு வளர்ச்சி, சட்டப்படியான உதிரிப்பாகங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட இடை நிறுவன வலையமைப்புச் செய்தல் மற்றும் இணையத்திற்கு உட்படுத்தல் மற்றும் தொழில்நுட்பத்தின் ஊடாக பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களின் பாதுகாப்பு தொடர்பாக நிறுவன சட்டகத்தை வலுப்படுத்தல் வேண்டும்.

iv. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களுடன் உரிய அரச – தனியார்துறை மற்றும் சனசமுக செயற்பாடுகள் மற்றும் வலையமைப்புச் செய்தல் சகல மட்டங்களிலும் மேம்படுத்தல் வேண்டும்.

v. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய உரிய சகல வகுதியினர்களின் புரிந்துணர்வை மேம்படுத்தல் மற்றும் அதன் பயன்பாடு திட்டமிடப்பட்ட கல்வி, ஆய்வு மற்றும் ஆராய்சிகளை மேம்படுத்துவதன் ஊடாக அடைந்து கொள்ளுதல் வேண்டும்.

vi. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு பற்றிய சர்வதேச பிணைப்பு, எமது தேசிய மற்றும் பூகோள கடப்பாடுகளின் பொறுப்புக்களாக கௌரவப்படுத்தல் வேண்டும்.

vii. நாட்டின் அபிவிருத்தி இலக்கினை நிறைவு செய்து கொள்வது தொடர்பாக பாரம்பரிய அறிவினை தொடர்ச்சியாக, வினைத்திறனாகவும் ஈடுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 7. கொள்கையின் நோக்கங்கள்

i. பாரம்பரிய அறிவு மற்றும் அறிவு ஒதுக்கம் இருக்கின்ற இடங்கள் மற்றும் பிரதேசங்களை இனங்கண்டு கொள்ளல், சேகரித்தல், பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டை மேம்படுத்தல்.

ii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பயன்பாட்டின் ஊடாக கட்டியெழுப்புகின்ற நன்மைகள் சமமான மற்றும் நியாயமான விதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

iii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பயன்படுத்துகின்றவர்களுக்கு மற்றும் அதன் பொறுப்பாளர்களுக்கு கௌரவமளித்தல், பயன்களை வழங்குதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

iv. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்புக்கும் பயன்பாட்டுக்கு உரிய இலக்கு வைத்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து செயற்படுத்துவதனை இலகுபடுத்துவதற்காக தேவையான நிறுவன வேலைச்சட்டகத்தை கட்டியெழுப்புதல், சட்டப்படியான அதிகாரம் மற்றும் வளங்களை வழங்குதல்.

v. பாரம்பரிய அறிவின் பயன்பாடு பற்றிய சமுக பொருளாதார மற்றும் சுற்றாடல் பெறுமானங்களை இனங்கண்டு கொள்ளுதல்.

vi. இலங்கைக்கு வெளியில் சட்டரீதியாக மற்றும் சட்டரீதியற்ற வகையில் எழுகின்ற, தற்பொழுது இந் நாட்டிற்கு வழங்கி முகங்கொடுக்காத பாரம்பரிய அறிவினை மீண்டும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நாட்டினுள் மீள்கட்டமைப்பு செய்தல்.

vii. மேற்படி இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் மற்றும் உள்நாட்டு அடையாளத்தை பாதுகாக்கும் வகையில் இலங்கையை அறிவு மையமாக ஆக்குவதற்கு பாரம்பரிய அறிவை வழங்குதல்.

## 8. தொடர்புத்தன்மை மற்றும் விடயப் பரப்பு

தற்பொழுதைய மற்றும் எதிர்கால பரம்பரைகளின் பயன்பாட்டுக்காக பரந்த மக்கள் பங்குபற்றலுடன் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டு மக்களின் வாழ்வாதார நிலைமை அதன் ஊடாக கட்டியெழுப்புவது தொடர்பாக மற்றும் இலங்கையை அறிவு மையமாக ஆக்கும் நோக்கில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு, பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய இந்த தேசிய கொள்கையின் ஊடாக உறுதிப்படுத்தப்படும்.

உள்நாட்டு கலாசாரத்தை பாதுகாத்தல், உள்நாட்டு மக்களின் வாழ்வாதார நிலைமையை கட்டியெழுப்புதல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பாதுகாத்தல், உரிய சகல அரச அல்லது அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆட்களுக்கு உரிய அதி கூடிய கடமையொன்றாகவும் பொறுப்பொன்றாகவும் இருப்பதாக கொள்கையின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 9. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு, பயன்பாடு, பரிமாற்றம் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான உபாய வழிகள்.

### 9.1 பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு பற்றிய பொது உபாய வழிகள்

i. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கத்தை பாதுகாத்தல் தேசிய தேவையொன்றாக சகல பிரிவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் மற்றும் பகுதி வாரியான கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கு பாரம்பரிய அறிவுப் பயன்பாட்டினை ஈடுபடுத்துகின்ற செயற்பாடுகளை உள்ளடக்குதல்.

ii. பொருத்தமான பொது முறைமையொன்றை பயன்படுத்தி ஆவணப்படுத்தக் கூடிய நிலைமையில் காணப்படுகின்ற அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை ஆவணப்படுத்தலின் ஊடாக அதற்கு பாதுகாப்பை வழங்குதல் மற்றும் ஆவணப்படுத்தப்படாது காணப்படுகின்ற அறிவினை சேகரித்து பாதுகாப்பை வழங்குதல்.

iii. பரந்த அளவில் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் ஒதுக்காகக் காணப்படுகின்ற பிரதேசங்களை இனங் காணல், அந்தப் பிரதேசங்களில் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் அந்த விசேட பிரதேசங்களில் களஞ்சியப்படுத்தியுள்ள அறிவுக்கு, பழக்க வழக்கங்களுக்கு மற்றும் கலாசாரத்திற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய பொருத்தமற்ற அபிவிருத்தி செயற்பாடுகளை இயன்றளவு குறைத்துக் கொள்ளல்.

iv. வேறு நாடுகளில் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களுடன் கூடிய மக்கள் தொகுதியினர்களுக்குச் சொந்தமான அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பாதுகாத்துள்ள பிரகாரம் ஆய்வு செய்தல் ஊடாக அந்த முறைமையை இந்த நாட்டிற்கு பொருந்துகின்றதா என தீர்மானித்து, அந்த முறைமைகளை எமது பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு தொடர்பாக ஈடுபடுத்திக் கொள்ளல்.

v. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு, பயன்பாடு, ஆய்வு, பகுபாய்வு மற்றும் மேம்பாடு தொடர்பாக சகல வசதிகளுடனும் தேசிய மையமொன்றை உருவாக்குதல்.

vi. பாரம்பரிய அறிவின் அடிப்படையான பிரதேச மொழி மற்றும் மக்கள் பழக்கங்களின் பாதுகாப்பு தொடர்பாக மொழி ஆய்வு கூடமொன்றை அமைத்தல்.

vii. பிரதேச மொழிகள் மற்றும் மக்கள் பழக்கவழக்கங்கள் தொடர்பாக மத்திய தரவுக் கட்டமைப்பொன்றை தாபித்தல்.

viii. சட்டரீதியாக மற்றும் சட்டரீதியற்ற வகையில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பாரம்பரிய அறிவுக்கு உரிய வளங்கள் மற்றும் மூலங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நாட்டினுள் மீள் கட்டமைப்புச் செய்வதற்கு இலங்கையில் வெளிநாட்டு சேவையை உபயோகப்படுத்தி செயற்படுதல்.

### 9.2 பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கிளன் பயன்பாடு பற்றிய உபாய வழிகள்

i. ஏதேனும் பிரதேசத்தில் முடக்கி விடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்றை அபிவிருத்தி செயற்திட்மொன்று அல்லது சூழலுக்கு, பொருளாதாரத்திற்கு, சமுக கலாசாரத்துடன் தொடர்புடைய ஏதேனும் அரச அல்லது தனியார் பிரிவின் செயற்பாடொன்றின் போது பிரதேசத்தில் நிலவுகின்ற, உரிய விடயங்கள் தொர்பில் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களின் போது தகவுதன்மையை ஏற்றுக் கொள்ளுதல், பயன்பாடு மற்றும் பிரபல்யப்படுத்தல்.

ii. ஏதேனும் நிகழ்ச்சித்திட்மொன்று அல்லது செயற்திட்டமொன்றை திட்டமிடுவதற்கு முன்னர் உரிய விடயப் உரிய விடயப் பரப்பின் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய திறன்கள் தொடர்பான முழுமையான அறிவு ஞானம், தாக்கங்களின் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளை தயார் செய்தல் தொடர்பாக பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றுக்கு இணங்க செயற்படுதல்.

iii. ஏதேனும் இடத்தில், பிரதேசத்தில் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழ்களை பயன்படுத்துகின்ற செயற்திட்டங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களின் பயன்பாட்டுக்கான தடைகளை நீக்குதல்.

iv. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களுக்கு மக்களின் பங்குபற்றலைப் பெற்றுக் கொள்ளுதல், தேவையான மூலப் பொருட்கள் மற்றும் வளங்களை இலகுபடுத்தல், அது தொடர்பாக நிதி ஏற்பாடு மற்றும் பயிற்சி வசதிகளை வழங்குதல் மற்றும் அரச மட்டத்தில் ஊக்கப்படுத்தல்களை வழங்குதல்.

## 9.3 பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பரிமாற்றிக் கொள்ளல் பற்றிய உபாய வழிகள்

i. லதரப்பட்ட இனக் குழுக்களுக்கிடையில், பலதரப்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பயன்பாட்டுக்கு இன்றிப் போவதை தவிர்க்கும் நோக்கில் மற்றும் நிலையான அபிவிருத்தியின் நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பாக பாரம்பரிய அறிவு நாட்டினுள் மற்றும் நாடுகளுக்கிடையில் பரிமாற்றிக் கொள்வது தொடர்பாக நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.

ii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பரிமாற்றலின் பேரில் அவற்றை களவாடுதல் மற்றும் அதனால் நாட்டுக்கும் அதனை தாங்குபவர்களுக்கு பாதகமாக பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்பினை களைந்து கொள்ளல் தொடர்பாக விசேடமாக புலமைச் சொத்துச் சட்டத்தை தேவையான பிரகாரம் திருத்தம் செய்து செயற்படுத்துதல்.

iii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய தற்பொழுதைய போக்கினை வகிக்கின்ற அல்லது வகிக்கின்றவர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு உரிய பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பயன்படுத்த வேண்டியதுடன் தற்பொழுதைய போக்கினை வகிக்கின்றவரின் உரிமையை பிரதானமாக கருவதன் ஊடாக பரிமாற்றத்தை மேம்படுத்தல்.

iv பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களிலிருந்து வெளிநாட்டு பயன்பாடுகள் தொடர்பாக பயன்படுத்திக் கொள்கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் உரிய அறிவின் மற்றும் பழக்கவழக்கங்களின் உரிமையை இலங்கையில் வைத்துக் கொள்வதற்கு சட்டரீதியான நிலைமையை வலுவாக பேணிக் கொள்ளல் மற்றும் உரிய அறிவு மற்றும் பழக்கவழக்களை இலங்கைக்குரிய வளமாக கருதுவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**9.4 பாரம்பரிய அறிவின் மற்றும் பழக்கவழக்கங்களின் ஊடாக உருவாகின்ற பெறுபேறுகளின் பயன்பாடு பற்றிய உபாய வழிகள்**

i. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் ஊடாக உருவாகின்ற பயன்களை எப்பொழுதும் உரிய சகல வகுதியினர்கள் மற்றும் இனக் குழுக்களுக்கிடையில் சமமாக மற்றும் சாதாரணமாக பகிர்ந்தளிப்பதற்கு பொறிமுறையொன்றை தயார் செய்தல்.

ii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் ஊடாக கிடைக்கின்ற பயன்களை தேசிய சொத்தொன்றாக கருதி செயற்படுதல் மற்றும் தேசிய மட்டத்தில் அதற்கான பெறுமதியை வழங்குதல்.

iii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் ஊடாக உருவாகின்ற பயன்களை தொடர்ச்சியாக நிறுத்தாது தயார் செய்யப்பட்ட பொறிமுறையின் ஊடாக பயணிக்கின்றதா என ஆராய்ந்து பார்த்தல் தொடர்பாக பின்னூட்டல் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்.

iv. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பயன்படுத்துவதன் ஊடாக உருவாகின்ற பயன்களை உரிய இனக் குழுவுக்கு பயன்படுத்தக் கூடிய பிரவேசிக்கக் கூடிய பயனொன்றாக உருவாக்கிக் கொள்ளுதல்.

v. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் ஊடாக உருவாகின்ற நன்மைகள் உரிய உள்நாட்டு மக்களுக்கு வழங்கும் முகமாக தேவையான சந்தர்ப்பங்களில் அரச தலையீட்டை மேற்கொள்ளல்.

vi. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்களின் ஊடாக கட்டியெழுப்புகின்ற நிதி ரீதியான நன்மைகளை உரிய மக்கள் தொகுதியின் கலாசாரத்திற்கு, தேசிய வளங்களுக்கு மற்றும் பாரம்பரிய அறிவுப் பாதுகாப்பு தொடர்பாக பாதகமாக தாக்கம் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றை தவிர்த்துக் கொள்வது தொடர்பாக அரச பங்குபற்றலுடன் பொருத்தமான திட்டங்களை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.

**9.5 பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் நிலையான பயன்பாடு மற்றும் பாதுகாப்பு பற்றிய நிறுவன உபாய வழி**

i. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு, அதன் பயன்பாடு மற்றும் நன்மைகளை சமமாகவும் நியாயமாகவும் பகிர்ந்தளித்தல் பற்றிய பொறுப்பினை நிறுவன மயப்படுத்துவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

ii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய பேச்சு, எழுத்து, கேட்டல் திறன் மற்றும் வேறு தகவல்களைப் பேணிச் செல்லல், இற்றைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ நிறுவனமயப்படுத்தப்படுவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

**9.6. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு பற்றிய சமூக மற்றும் பொருளாதார உபாய வழிகள்.**

i. பாரம்பரிய அறிவினை தன்னகத்தே கொண்டவர்கள் சமுகத்தின் முக்கியமான மற்றும் கௌரவத்துக்குரிய நபர்களாக கருதுதல் மற்றும் சமுக பொருளாதார செயற்பாடுகளில் அவர்களுடைய பங்களிப்பை பெற்றுக் கொள்ளுதல்.

ii. பாரம்பரிய அறிவினை தன்னகத்தே கொண்டவர்கள் தொடர்பாக தேசிய மட்டத்தில் ஊக்கப்படுத்தல் அல்லது மதிப்பீட்டு முறைமையொன்றை தயார் செய்தல்.

iii. கலாச்சார பண்புகள் தொடர்பாக பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை ஈடுபடுத்திக் கொள்வதை பிரபல்யப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக அரச அனுசரணையை பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றை தயார் செய்தல்.

iv. ஒவ்வொரு விசேட துறைகளில் பாரம்பரிய அறிவினைக் கொண்டிருக்கின்றவர்கள் தொடர்பாக நலன்புரி முறை மற்றும் அவற்றை ஊக்கப்படுத்தும் முறைமையை அமுல்படுத்தச் செய்தல். உள்நாட்டு அறிவை பெற்றிருக்கின்ற ஏதேனும் விசேட இனக் குழு தொடர்பாக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் அவர்களுடைய வாழ்வாதார நிலைமைகளை கட்டியெழுப்புவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

v. பரம்பரை பரம்பரையாக ஊடறுத்துச் செல்கின்ற பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை தொடர்ச்சியாக பேணிச் செல்வது தொடர்பாக பாரம்பரிய அறிவை கொண்டிருக்கின்றவர்களை ஊக்கப்படுத்தல் மற்றும் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு இளைஞர் பரம்பரையினரை ஊக்கப்படுத்தல் தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

vi. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய பெறுமதிகளை மதிப்பீடு செய்தல் மற்றும் தேசிய திட்டமிடல்களுக்கு மற்றும் தேசிய வருமானத்திற்கு அந்தப் பெறுமாணங்களை உள்ளடக்குவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

vii. ஏதேனும் செயற்திட்டமொன்று அல்லது பணியொன்றின் ஊடாக பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள இனக் குழுக்கள் மற்றும் கலாசாரங்கள் அழிவுக்கு உள்ளாகுமாயின் அதனை தடுத்தல் அல்லது அழிவினை இழிவுபடுத்துவதற்கு செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

viii. ஏதேனும் நபரொருவர் அல்லது இனக் குழுவொன்று அல்லது பாரம்பரிய அறிவை பயன்படுத்தி வர்த்தக ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியமான சூழல் நலன் அடிப்படையில் புதிய புத்தாக்கங்களில் ஈடுபடுவார்களாயின் அவற்றை ஊக்கப்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்.

ix. ஏதேனும் நிறுவனத்தின் ஊடாக ஏதேனும் விதத்தில் பாரம்பரிய அறிவுடன் தொடர்புடைய சேகரிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரதியொன்று உத்தேச தேசிய மத்திய நிலையத்தில் வைப்புச் செய்வற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

**9.7 பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய கவனம் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றிய உபாய வழிகள்**

i. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பயன்படுத்துகின்ற பிரதேசங்கள், இனக குழுக்கள் மற்றும் உரிய அறிவு பற்றிய கவனத்தினை எதிர்வரும் பரம்பரை தொடர்பாக வழங்கும் முகமாக மனோபாவத்தை மேம்படுத்துவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

ii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கஙகள் தொடர்பான பிரதான நிறுவனங்களை அறிவுறுத்தும் பிரிவொன்று உத்தேச தேசிய நிலையத்தில் உருவாக்குதல் மற்றும்

அதற்கு உரிய மனித வளங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை வழங்குதல்.

iii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் மற்றும் அவற்றின் பயன்பாட்டின் பயன்பாடுகள் பற்றிய அறிவு தொடர்பான உள்ளடக்கமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் மற்றும் பயிற்சிப் புத்தகங்களுக்கும் மற்றும் பல்கலைக்கழக பட்டங்கள், பட்டப்பின்படிப்பு, டிப்லோமா பாடநெறிகள் தொடர்பாக உள்ளடக்குதல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் பாடமொன்றாக உருவாக்குவதற்கு உரிய நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

iv. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான கல்வித் துறையில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்கள் ஆகியோர்களை அறிவுறுத்தல்.

v. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பாக பாடசாலை செயற்திட்டங்களை ஆரம்பித்தல் தொடர்பாக பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்தல்.

vi. நாடு பூராகவும் பாரம்பரிய அறிவு, பழக்கவழக்கங்கள் மற்றும் அதன் பெறுமதி மற்றும் பாதுகாப்பின் அத்தியவசியத்தன்மை பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை பிரபல்யப்படுத்தல்.

vii. ஊடக நிறுவனங்களின் ஊடாக பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை விளம்பரப்படுத்தல், ஆராய்சிகளை மேற்கொள்ளல், வசதிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக மக்கள் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு முறைமைகளைத் தயார் செய்தல்.

viii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பாக காணப்படுகின்ற புத்தகங்கள் மற்றும் வேறு வெளியீடுகளை தராளமயப்படுத்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல் நிலையங்களுக்கு அந்த வெளியீடுகளை வழங்குவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் இந்த வெளியீடுகளின் உருவாக்கம் தொடர்பாக எழுத்தாளர்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல்களை வழங்குதல்.

ix. பல்கலைக் கழக பட்டப்பின்படிப்பு மட்டத்தில் பாரம்பரிய அறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆராய்சிகள் தொடர்பாக உள்நாட்டு மட்டுமல்லாது வெளிநாட்டு ஆராய்சியொன்றை ஊக்கப்படுத்தல்.

x. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் ஏனைய ஆய்வுகள் மற்றும் பாரம்பரிய அறிவினைக் கொண்டுள்ளவர்களின் பணிகளை கண்காணிக்கும் முகமாக வருடாந்த கருத்தரங்குகளை நாடாத்துதல் மற்றும் விருது வழங்குதலும்.

**9.8 பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் உண்மையான பாதுகாப்பு பற்றிய உபாய வழிகள்**

i. பாரம்பரிய அறிவைக் கொண்டவர்கள் மற்றும் அவர்களுடைய புலமைச் சொத்து உரிமையை பாதுகாப்பதற்கு சட்ட ஏற்பாடுகளை வழங்குதல்.

ii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் சூழல் நலன் உடையதாகவும் பாதகமாகவும் ஈடுபடுத்திக் கொள்ள முடியுமாக இருப்பதனால் அந்த அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் சூழலில் மீள் உருவாகும் மட்டத்தை விஞ்சாத வகையில் நிலையான பயன்பாடு தொடர்பாக சட்டரீதியாக வசதிகளை வழங்குதல்.

iii. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு தொடர்பாக சட்டப் பாதுகாப்பை வழங்குதல் தேசிய தேவைப்பாடுகளாக புரிந்து கொண்டு அவற்றை செயற்படுத்தல்.

iv. பாரம்பரிய அறிவினை கொண்டிருப்பவர்களின் அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் முறைகேடாக பெற்றுக் கொள்ளல் உள்ளடங்கலாக பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் முறையற்ற பயன்பாடு, களவாடுதல், முறையற்ற விதத்தில் ஈடுபடுத்தல் போன்றவற்றை நிறுத்துவதற்கு சட்டரீதியான ஏற்பாடுகளை வழங்குதல்.

v. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களை பயன்படுத்தல் ஊடாக உருவாகுகின்ற நன்மைகள் சகல இனக் குழுக்களுக்குமிடையில் சமமாகவும் நியாயமாகவும் பகிர்ந்தளிப்பதற்கு சட்டரீதியான நிலைமைகளை தயார் செய்தல் மற்றும் அதன் மேற்பார்வைக்கு சட்டரீதியான முறைமையொன்றை தயார் செய்தல்.

vi. பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்புக்குரிய ஏனைய சட்டங்களை இற்றைப்படுத்தல், பாரம்பரிய அறிவுக்குரிய வேறு சர்வதேச சமவாயங்கள், பிரகடணங்கள் மற்றும் கூற்றுக்களை உள்ளடக்குதல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் பழக்கவழக்கங்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு பற்றிய பிரிவுகள், ஒழுங்குவிதிகள் போன்றவற்றை அவற்றுக்கு உள்ளடக்குதல்.

vii. பாரம்பரிய அறிவு பாதுகாப்புக்கு உரிய தற்பொழுது காணப்படுகின்ற சட்ட ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளின் படி திருத்தங்களை மேற்கொள்வதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.